பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத வூ ஆவணி மீ 06 உ புதன்கிழமை (22-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 01 கதிர்: 172

# படகு அகதிகளை பாதுகாக்க

# நாளை முதல் புது நடைமுறை

## தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை தாக்கு!

ஸ்ரீலங்கா கடற்படையினர் நான்கு தமிழக மீனவர்களை நடுக்கடலில் வைத்து தாக்கி, அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்து எடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

இராமேஸ்வரம் திரும்பிய இம் மீனவர்கள் இது தொடர்பாக தமிழ் நாடு மீன் வளத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டனர். [ஒ-எ]

## வடபகுதிக்கு எரிபொருள் எடுத்துவர அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ். மாவட்டத்துக்கு எரிபொருள் எடுத்து வருவதற்கு அரசு முற்றாகத் தடை செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் சமூக அமைப்புக்களுக்கு பொருள்கள் கொண்டு செல்ல அனுமதியளிக்கும் பாதுகாப்புச் சபை, எரிபொருள் கொண்டு செல்ல மட்டும் அனுமதி தர மறுத்து வருகிறது.

தென்பகுதியில் இருந்து வரும் வாகனங்கள் குறிப்பிட்ட அளவு எரிபொருள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டாலும், வவுனியா வந்ததும் மீதியான எரிபொருளை வவுனியா இராணுவ முகாமில் வைத்துச் செல்ல வேண்டும் என்றும், மீள வரும்போது அதைப் பாவிக்கலாம் என்றும் பணிக்கப்படுகிறது.

இதேநேரம், கொழும்பில் இருந்து வந்த தனியார் லொறிகளில் எரிபொருள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் தாக்குதல்களில் சிப்பாய்கள் 7 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 22

மட்டக்களப்பு, ஏறவூரில் நேற்று முன்தினம் [திங்கள்] விடுதலைப் புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் 7 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஏறாவூரில் இருந்து கிரானுக்கு இராணுவத்தினர் ''பிக்கப்'' வாகனம் ஒன்றில் ரோந்து சென்ற வேளையில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடத்தினர். அப்போது சிப்பாய்கள் ஐவர் கொல்லப்பட்டனர்.

அதே பகுதியில் வைத்து கால் நடையாகச் சென்ற படையினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலிலும் படையினர் இருவர் கொல்லப்பட்டனர். (ஓ-5)

## கிளிநொச்சிப் பகுதியில் ஹெலி தாக்கி 4 பேர் பலி

கிளிநொச்சி, கொம்படி வெட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் (திங்கள்) மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.

சின்னத்துரை இளங்கோ (வயாவிளான்), தவராசா (செல்வநாயகபுரம், அச்சுவேலி) ஆகியோரும் இன்னும் இருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-5]

## படகின் மீது ஹெலி சூடு; அராலிப்பகுதியில் 2 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 22

அராலித் துறைக்கு அண்மையில் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த படகு ஒன்றை நோக்கி நேற்று முன்தினம் மாலை 4-45 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்றிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

கடல் மட்டத்திற்கு தாழப் பறந்து வந்த ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும்-

இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததாகவும்-

மற்றிருவர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## போக்குவரத்துப் பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்; ஆக, 22

தமிழகத்துக்குச் செல்லும் அகதிகள் பலரும் அனுபவம் இல்லாத படகோட்டிகளாலும், தரமற்ற படகுகளினாலும் வீணாக உயிரிழக்க வேண்டிய அவலநிலை உருவாகியுள்ளது. இனிமேல் இந்த நிலை தொடராமல் இருக்க நாளை வியாழக்கிழமை முதல் புதிய நடைமுறை அமுலுக்கு வருகிறது.

இப்படிக் கூறினார் பயணிகள் போக்குவரத்துத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. சலீம்.

நேற்று மாலை அவர் தொடர்பகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் புதிய நடைமுறைகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

புதிய நடைமுறைகள் வருமாறு:-

★ படகோட்டிகளுக்கும், படகுகளுக்கும் அனுமதிப்பத்திரம் நாளை வியாழக்கிழமை முதல் வழங்கப்படும்.

[3ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கான உணவுடன் வந்த லொறிகள் மீது ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 22

அகதிகளுக்கு வழங்குவதற்கென உணவுப் பொருள்களுடன் கொழும்பில் இருந்து வந்த இரு லொறிகள் மீது ஹெலிகொப்டர் தாக்குதலை மேற்கொண்டது. லொறியில் வந்த யாழ்ப்பாணம் மெதடிஸ்ததிருச்சபையின் முகாமைக்குரு வண. கே. பி. கோவிந்தராஜ் உட்பட மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

### மெதடிஸ்த மதகுரு காயம்

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பகல் 12 மணி அளவில் மிருசுவிலில் இடம் பெற்றது.

கொழும்பில் பாதுகாப்பு கவுன்சிலிடம் அனுமதி பெற்று இரண்டுலொறிகளில் உணவு, மற்றும் மருந்துப் பொருள்களை மெதடிஸ்ததிருச்சபை யாழ்ப்பாணம் கொண்டு வந்தது.

வரும் வழியில் இயக்கச்சிக்கும், மிருசுவிலுக்கும் இடையில் ஹெலி வட்டமிட்டு லொறிகள் மீது தாக்குதல் நடத்தியது.

ஹெலி சென்றபின் இரு லொறிகளும் பயணத்தைத் தொடர்ந்தன. மீண்டும் மிருசுவில் சந்தியில் ஹெலி லொறிகள் மீது தாக்குதல்

[3ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் பணப் புழக்கம் சீராகும் சாத்தியம்?

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகவும் குறைந்துபோயுள்ளபணப்புழக்கத்தை ஓரளவேனும் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உதயனுக்கு நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து ஒரு தொகைப் பணத்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரவும் —

அந்தப் பணத்தை அரசாங்க அதிபரின் கண்காணிப்பில் கொடுக்கவும் —

அரச அதிபர்' பணத்தில் பெரும்பகுதியை மாவட்டத்தில் உள்ளவங்கிகளுக்கு வழங்கவும் — மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நடைமுறைச் சாத்தியமாகக் கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளதாக அறியவந்தது.

இப்போது குடாநாட்டில் பணப்புழக்கம் மிகவும் குறைந்து விட்டதால் வங்கிகள் தமது வாடிக்கையாளர்களின் காசோலைகளுக்குக் கூட பணம் வழங்காமல் இருப்பது தெரிந்ததே.

வெளியில் வர்த்தக வட்டாரங்களிலும், பணப்புழக்கம் தேய்ந்துபோயுள்ளதால் மக்கள் பெரும் கஷ்டமடைகின்றனர். [அ]

## வவுனியாவில் புதிய ராணுவ முகாம்கள்

யாழ்ப்பாணம், ஆக. 22

வவுனியா நகருக்குச் சமீபமாக காட்டு மாங்குளம், காத்தார் சின்னக்குளம் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் புதிதாக முகாம்களை அமைத்துள்ளதாகத் தெரிய வருகிறது. [ஓ-5]

## மந்திகை வைத்தியசாலை சுற்றாடலில் குண்டு வீச்சு

மந்திகை வைத்தியசாலைச் சுற்றாடல் பகுதியில் நேற்றுக் காலை 6 மணி முதல் பொம்மர்கள் தாக்குதல் நடத்தின.

4 பொம்மர்களும், ஒரு ஹெலியும் வட்டமிட்டு குண்டுகளை வீசின. வீசப்பட்ட ஒன்பது குண்டுகளில் ஐந்து மட்டுமே வெடித்தன.

ஒருவர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் பெண்மணி ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## மலிவு விற்பனை

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் மீரா வெளியீடுகளாக 1989 ல் 1990 ல் வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள். (31 ம் திகதிவரை) 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கோயில் முன்புறம் யாழ்ப்பாணம். (14085)

## தவறிவிட்டன

19 - 08 - 90 கல்வியன்காடு சந்திக்கும் கைலாசபிள்ளையார் கோவிலுக்கும் இடையில் செல்வி மு. மங்களகௌரி வீ. புவனேஸ்வரன் ஆகிய பெயருடைய இரண்டு காசோலைகள் தவறிவிட்டன. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (13906)

437881219 V இலக்கமுடைய அடையாள அட்டை நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ம. சிவஞானம் 43. 3 ஆம் ஒழுங்கை பலாலி வீதி. யாழ்ப்பாணம். (14088)

685842033 V இலக்கத்தையுடைய அநுராதபுரத்தை பிறப்பிடமாகவும் கருவிலை வதிவிடமாகவும் கொண்ட அம்பிகாபதி முத்தையா என்பவரது அடையாள அட்டையை காணவில்லை. கண்டெடுத்தவர்கள் அம்பிகாபதி முத்தையா, கலைவாணி லேன், பொற்பதி றோட், கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (140[illegible])

## காணவில்லை

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட தருமரெத்தினம் கிருஸ்ணவேணி வயது 12 பொது நிறம் 3' 6'' 19 - 08 - 90 இல் இருந்து காணவில்லை. மாமியார் இவரை தேடுகின்றார். கண்டவர்கள் 29, சடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (14082)

## தமிழ் மல்ரி சேவிஸ்

எமது சேவை குளப்பிட்டி வீதி உயரப்புலம் ஆனைக்கோட்டையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம். திருமணசேவை, காணி வாங்கல்- விற்றல், படம் வரைதல் போன்ற சேவைகள் நடைபெறுகின்றன. (14084)

## டில்கா வாச் வேக்ஸ்

எமது ஸ்தாபனம் தக்குதலிற்கு உள்ளானதால் உயரப்புலம் குளப்பிட்டி வீதியில் தற்காலிகமாக இயங்குகின்றது. திருத்துவதற்கு தந்த உங்கள் கடிகாரங்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். கடிகாரங்கள் திருத்திக் கொடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். (14083)

## விநாயகர் உற்சவம்

கொக்குவில்-கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 23 ஆம் திகதி வியாழன் முதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். (இ-69)

# உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் முற்பணம்

யாழ்ப்பாணம், ஆக. 22

வட பிராந்திய உப்பளங்களைச் சேர்ந்த உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்குக் காசோலையாக ரூ 750 இடைக்காலச் சம்பள முற்பணம் வழங்கப்படவுள்ளது.

வட பிராந்திய முகாமையாளர் திரு. செ. வேலாயுதபிள்ளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இடம் பெயர்ந்தோர் வசதிக்காக நாளை 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை நல்லூர் மகாவித்தியாலயத்திலும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு தமிழ் கலவன் பாடசாலையிலும் (கச்சாய் வீதி) காசோலை வழங்கப்படும்.

வசதியான இடத்தில் இதனை ஊழியர் நேரடியாகப் பெற முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# இலங்கைத் தேயிலையை ஏற்ற கொழும்பில் ஈராக் கப்பல்

ஏல விற்பனையில் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கைத் தேயிலையை ஏற்றிச் செல்வதற்காக ஈராக் கப்பல் ஒன்று கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கிறது.

வளைகுடா நெருக்கடி காரணமாக இலங்கைத் தேயிலைக் கொள்வனவை ஈராக் கைவிடவில்லை என்றும் —

கடந்த வாரம் தேயிலை ஏல விற்பனையில் ஈராக் கலந்து கொண்டது என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் தனக்குத் தேவையான தேயிலையில் 70 சதவீதமானதை இலங்கையிலிருந்தே வாங்குகிறது. மிகுதியை இந்தோனேஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து ஈராக் கொள்வனவு செய்கிறது. (இ-எ)

## தற்காலிக கொட்டில் வீடுகள் அமைப்பதற்கான ஒப்பந்தக் காரரின் விண்ணப்பம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவினால் அமைக்கப்படவிருக்கும் தற்காலிக கொட்டில் வீடுகளை கட்ட உதவ விரும்பும் ஒப்பந்தக்காரர், கிராம முன்னேற்றச் சங்கங்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தலைவர் இ. செ. சங்கம்,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5173)

## 'M' THREE TRAVELS

1. எம்மிடம் கடவுச்சீட்டுக்கள் (Passport) தந்தவர்கள் தயவு செய்து எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
2. முன்பு பத்திரிகையில் பெயர் போட்டு எம்மை சந்திக்க சொன்னவர்களும் மீண்டும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
3. நீங்கள் எரதபட்சத்தில் உங்களுடைய கடவுச்சீட்டு உட்பட சகல பத்திரங்களுக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல இதனால் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

## 'M' Three Travels

20, கந்தப்புராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவுஆளர் வீதி,
அளவெட்டி வடக்கு.
(விங் கொம்பனி அருகாமை)

[சி-5175]

## இடமாற்ற அறிவித்தல்

### இராஜநாதன் இரவிந்திரவர்மன் அன் கோ

(பட்டயக் கணக்காளர்)

### R. R. Varman & Co

Chartered Accountants

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கட்டடத்தில் இருந்த எங்கள் செயலகம் தற்காலிகமாக தற்போது

" புலவர் வளவு "

இல. 528, திருநெல்வேலியில்

இயங்குகிறது என்பதனை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

[முன்னைய ஈ. வி. தளையசிங்கம் அன் கோ உட்பட]

முகாமையாளர்.

[14087]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

## மீனலோசனி இராசரெத்தினம்

[வண்ணார்பண்ணை]

22 — 08 — 1990

உத்தமியே மீனா எம் உயிரான கண்மணியே
சித்தம் கலங்குதம்மா சிந்தனையும் சிதறுதம்மா
நித்தமுனை நினைத்திருப்போம் நெஞ்சிலுனை
வைத்திருப்போம்
பத்திசெய்த பேறெல்லாம் பரமனுனக்களித்திடுவான்
அன்னாரின் பிரிவால் துயருற்றுவாடும்

கணவர், தந்தை, தம்பிமார், தங்கை
மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள், உறவினர்.

### அந்தியேட்டிக்கிரியைகள்

22 - 08 - 90 அன்று இல. 9 A, இராமகிருஷ்ணா அவனியூ, வெள்ளவத்தையில் நடைபெறும். அன்று காலை 9.00 மணியளவில் இல. 31, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணையிலும் அவரது ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை நடைபெறும்.

(13905)

# நாலாண்டு நினைவஞ்சலி



செல்வன்

## அமரர் இரத்தினம் உதயசூரியன்

| அன்னை மடியில்: | அநியாய உயிரிழப்பு: |
|---|---|
| 06 — 12 — 1957 | 22 — 08 — 1986 |

திதி: 07 — 09 — 1990

அன்புகலாக் குல விளக்கு உதயசூரியனே
துன்பம் துடைத்த எங்கள் தூமணியே
துயர் மிகும் எம் நிலை சொல்ல இயலாதே
அன்பிற்கோர் முதல் மகனே
பாசத்திற்கோர் அண்ணனே
கண்ணை இமை காப்பது போல் எம்மை
வண்ணமுறக் காத்து வந்தீர்

உன் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் அஞ்சலியை
சமர்ப்பித்து இறைஞ்சி நிற்கும்,

அன்புத்தாய், சகோதரர்கள்,
பெறாமக்கள், மைத்துனிமார், மாமன்மார்,
உற்றார், உறவினர்கள்.

வேலணை மேற்கு, வேலணை. [14077]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திரு. V. E. இரத்தினேஸ்வரன்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 17 - 09 - 1937 | 23 - 07 - 1990 |

அன்பான அப்பா! பொறுமையின் பொக்கிஷமாய் என்றும் சிரித்த முகத்துடன் எங்களை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து ஆளாக்கிய எமது இதயத் தெய்வமே! 31 ஆம் நாளான இன்று கண்ணீர் மல்க நினைவு கூருகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
தாய், மனைவி, மக்கள், உறவினர்.

திருநெல்வேலி. [14089]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி உத்தரவுப்படி 5 சிங்கள மீனவரும் விடுதலை

சென்னை, ஆக. 22

இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து பாக்கு நீரிணையில் கைது செய்யப்பட்ட ஐந்து சிங்கள மீனவரையும் விடுதலை செய்யும்படி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி உத்தரவிட்டார்.

கைதான போது கைப்பற்றப்பட்ட 2 படகுகள், மற்றும் வயர்லெஸ் சாதனங்கள் ஆகியவற்றை சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரிடம் ஒப்படைக்கும்படியும் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்தார்.

அப்படகுகள் இலங்கை கடற்றொழில் அமைச்சுக்குச் சொந்தமானவை என்றும் மீன்வள ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த போது தவறி இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து விட்டன என்றும் இலங்கைத் துணைத் தூதர் தமிழக அரசிடம் விளக்கம் அளித்திருந்தார். (இ-எ)

# தமிழக சிற்பாசிரியர்கள் இந்திய தூதரிடம் கையளிப்பு

கொழும்பு, ஆக. 22

வடக்கு-கிழக்கு சண்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் தஞ்சமடைந்திருந்த இரண்டு தமிழக சிற்பாசிரியர்கள், கடந்த ஞாயிறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களைப் பாதுகாப்பாக தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியத் தூதரகம் இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்தது.

சந்திரன், கணேசன் ஆகிய சிற்பாசிரியர்களை, அவர்களது சொந்த இடமான தஞ்சாவூருக்கு அனுப்பிவைக்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்காக தமிழகத்தில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். (இ-எ)

# இருநூறு முஸ்லிம்களுக்கு ராணுவ பயிற்சி

கொழும்பு, ஆக. 22

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 200 முஸ்லிம் இளைஞருக்கு இரண்டு வார கால இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

இவர்கள் சாத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (இ-எ)

# உமி அடுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 22

உமி அடுப்பு ஒன்றை தமிழீழ ஆய்வு நிறுவனம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

உமியை வீணாக்குவதையோ அல்லது குப்பையாக எரிப்பதையோ தவிர்த்து உமியை சேகரித்து வைக்குமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உமி அடுப்பு சாதாரண வீட்டுப் பாவனைக்கு ஏற்றவாறு மிக விரைவில் மக்களின் பாவனைக்கு வரும் எனவும் தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது. (இ)

# ஓட்டோ சங்கர் தப்பினார் சென்னை சிறையில் இருந்து!

சென்னை, ஆக. 22

தமிழகத்தை பெரும் கலக்கு கலக்கியவரும் அரசியல் உட்பட பல துறைகளிலும் ஊழல்கள் மோசடிகளைப் புரிந்தவரும், திருவான்மியூர் கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டவருமான ஓட்டோ சங்கர் உட்பட ஐந்து கைதிகள் சென்னை மத்திய சிறையில் இருந்து தப்பிவிட்டனர்.

இது தொடர்பாக 12 சிறைக்காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்றும்—

அவர்களில் மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் திரு கருணாநிதி நேற்றுச் சட்டசபையில் தெரிவித்தார்.

தப்பிச்சென்ற கைதிகளைப் பிடிக்க விசேட பொலிஸ் கோஷ்டி நியமிக்கப்பட்டிருப்பதாகவும்—

திங்கள் நள்ளிரவுக்குப் பின்னரே சிறைக் காவலர்கள் சிலரின் உதவியுடன் இவர்கள் தப்பிச் சென்றதாகவும் திரு. கருணாநிதி சொன்னார்.

விபச்சாரம், கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஆகியவை தொடர்பாகவும்—

விபச்சாரத்துடன் தொடர்புபட்ட பெண்கள் உட்பட பத்துக்கும் அதிகமானோரை கொலை செய்தது தொடர்பாகவும் ஓட்டோ சங்கர்மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஓட்டோ சங்கருக்கு எதிரான விசாரணை நீதிமன்றத்திற்கு வரும்போது தமிழகத்தின் பல அரசியல் புள்ளிகள் மற்றும் பிரபல நடிகைகளுடன் தொடர்புபட்ட விபச்சார நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் வெளியாகும் என பரவலாகப் பேசப்பட்டு வருவது தெரிந்ததே. (உ-ஓ-எ)

# அச்சுவேலி: காயமுற்றோர்

அச்சுவேலி, ஆக. 22

திங்கட்கிழமை பொதுச்சந்தைப்பகுதியில் நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலின் போது படுகாயமடைந்தோர் விபரம் வருமாறு:-

து. துரைராசா [மரக்கறி வியாபாரி], தவமணிதேவி துரைராசா [மரக்கறி வியாபாரி இருவரும் தம்பதிகள்] - எஸ். சிவஞானம் [மரக்கறி வியாபாரி]. எஸ். சோதி [வியாபாரி], திருமதி இ. கோபால் [மரக்கறி வியாபாரி] வ. வேலுப்பிள்ளை [அரிசி வியாபாரி]

அச்சுவேலி பொதுச்சந்தை இயங்க முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளது. அதனால் நேற்றுச் சந்தை கூடவில்லை

இடிபாடுகளை அகற்றித் துப்புரவு செய்யும் வரை சந்தை தற்காலிகமாக வேறு இடத்தில் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திங்கட்கிழமை நான்கு பேர் பலியாகினர். பல லட்சம்ரூபா பெறுமதியான வியாபார நிலையங்கள், சொத்துக்கள் சேதமடைந்தன. பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

# உடைகளைக் களையப் பணித்து கடுமையாகத் தாக்கினர் படையினர்!

## வள்ளத்தில் சென்று திரும்பியவரின் அனுபவம்

— உதயன் மானிப்பாய் செய்தியாளர் —

மானிப்பாய், ஆக. 22

எம்மைத் தமது படகில் ஏற்றியதும் கடற்படையினர் உடைகளைக் களையுமாறு பணித்தனர். நாம் அவ்வாறு செய்ததும் 'பட்டன்' பொல்லுகளாலும், வயர்களாலும் தாக்கினர். கைகளால் அடித்தனர். கால்களால் உதைத்தனர். தாக்குதல் தாங்காமல் நான் மயங்கிவிட்டேன்.

இவ்வாறு தெரிவித்தார் குப்பிளான் விக்னேஸ்வரா கல்லூரி மாணவனான பரமநாதன் விநோதன்.

இவர் இந்தியாவுக்கு அகதியாக வள்ளத்தில் புறப்பட்டு, இந்தியப் படகு என நினைத்து இலங்கைக் கடற்படைப் படகை அழைத்துவினையை விலைக்கு வாங்கிய பயணிகளில் ஒருவர்.

''கடற்படைப் படகை அழைத்து இம்சைப்பட்ட வள்ள அகதிகள்'' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது அல்லவா? அந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தவரே மாணவன் விநோதன் தான்.

தமது பயணம், தாம் பட்ட கஷ்டங்கள், அனுபவித்த இம்சைகள் பற்றி அவர் உதயனுக்குத் தெரிவித்த மேலதிக விபரங்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்:-

எனது நண்பர்கள் சிலர் அகதிகளாகத் தமிழ்நாடு செல்வது அறிந்து நானும் அவர்களுடன் போக முடிவு செய்தேன்.

கடந்த செவ்வாய்க்கிழமை (14 8 . 90) இரவு ஏழு மணியளவில் எம்மை ஏற்றிச் சென்ற வள்ளம் புறப்பட்டது.

அன்றைய தினம் ஆறு வள்ளங்கள் அகதிகளை ஏற்றிச் சென்றன. எமது வள்ளம் மூன்றாவதாகச் சென்றது. அதில் சுமார் 60 பேர் இருந்தோம். 25 பேர் பெண்கள்; 7 பேர் வயோதிபர்கள்; இருபது பேர் இளைஞர்கள்; 8 குழந்தைகள். வள்ளக் கட்டணமாக ஒவ்வொருவரிடம் இருந்தும் 1800 ரூபா அறவிடப்பட்டது.

### கடலில் 'பரா' வெளிச்சம்

முன்னால் சென்ற இரண்டு வள்ளங்களைத் தொடர்ந்து எமது வள்ளம் சென்றுகொண்டிருந்தது.

வள்ளம் புறப்பட்டவுடன் வானில் பறந்த ஹெலிக்கொப்டர்களின் 'பரா' வெளிச்சத்துக்குப்பயந்துபயந்து மறைந்துசெல்லவேண்டி இருந்தது. அலைகள் அதிகம் இருந்தன. அதனால் முன்னுக்குச்சென்ற வள்ளங்களை எமது படகோட்டியால் பின்தொடர முடியவில்லை. அத்துடன் படகின் சுக்கான்கூடச் சரியாக இயங்கவில்லை. வள்ளம் புறப்பட்டபின்னர்தான் சுக்கான் திருத்தப்பட்டது.

### படகும் கரையும்

இரவு முழுவதும் பயணம் செய்த நாம் மறுநாட்காலை கரை ஒன்று தெரிவதையும் கடலில் பெரிய படகு ஒன்று வருவதையும் கண்டோம். இராமேஸ்வரம் கரையை அடைந்துவிட்டோம்; இந்தியப் படகே தெரிகிறது என்று மகிழ்ந்தோம் அந்த மன மகிழ்ச்சியில் மேற்படி படகை (எமது வள்ளத்தின் படகோட்டி உட்பட) அனைவரும் கையசைத்து அழைத்தோம்.

விரைந்துவந்த அந்தப் படகு எமக்கு அருகில் வந்தவுடன்தான் அது இலங்கைக் கடற்படைப்படகென்று அறிந்தோம். நாம் தலைமன்னாருக்கு அருகில் நிற்பதையும் தெரிந்துகொண்டோம்,

கடற்படையினர் எமதுவள்ளத்தில் ஏறியவுடன், 'எங்கே போகிறீர்கள்? நீங்கள் புலிகளா?' என்று கேட்டு அடித்தனர்.

நாங்கள் அகதிகள் என்றும், யாழ்ப்பாணத்தில் சாப்பிட, படிக்க வசதியில்லாததாலும் பாதுகாப்பு இல்லாததாலும் இந்தியா செல்வதாகவும் கூறினோம்.

### தெரிந்து ஏற்றினர்

கடற்படையினர் வள்ளத்தில் இருந்த இளம் வயதினர் 18பேரைத் தெரிந்தெடுத்துத் தமது கப்பலில் ஏற்றினர். ஏனையோருடன் வள்ளத்தைத் தமக்குப் பின்னால் வரும்படி உத்தரவிட்டு தலைமன்னார் முகாமுக்குக் கூட்டிச் சென்றனர்.

### 9 மைல்கள் நடந்தோம்

படகில் வைத்து எமது உடைகளைக் களையுமாறு பணித்தனர். நாம் அவ்வாறு செய்ததும் பொல்லுகள், வயர்கள் கொண்டு எம்மைத் தாக்கினர். கைகளால் அடித்தனர், கால்களால் உதைத்தனர். அவர்களின் அடி தாங்க முடியாமல் நான் மயங்கி விட்டேன்.

மயக்கம் தெளிந்த பின் எம்மில் ஆறுபேரை விடுவித்து ஓடுமாறு விரட்டினர். நாம் சோர்வு மிகுதியால் கஷ்டப்பட்டு 9 மைல்கள் நடந்து பேசாலையை அடைந்தோம். அங்கு விடுதலைப்புலிகள் முகாமில் நடந்தவற்றைக் கூறினோம்; அவர்கள் எம்மை யாழ்ப்பாணம் கூட்டி வந்தனர்.

### முகாமில் 100 இளைஞர்

தலைமன்னார் முகாமில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சுமார் நூறுபேர் வரை இருப்பதைக் கண்டேன்.

என்னுடன் வந்த எனது நண்பர்களான உடுவில் கிராமத்தைச் சேர்ந்த ப. அருள்ராஜன் [வயது 19], மா. மகாதரன் (வயது 19), எஸ் கந்தசாமி (வயது 25), என். இரவீந்திரன் (வயது 20). எஸ். பேரின்பராசா (வயது 25). குப்பிளான் கிராமத்தைச் சேர்ந்த திரு, செங்காதரன் உட்பட பதினெட்டுப்பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

புதன்கிழமை (15 8-90) விடுவிக்கப்பட்ட நாம் ஞாயிறு 19 8-90) மாலை யாழ்ப்பாணம் வந்தடைந்தோம். [illegible] (அ-90)

# செட்டிகுளம் தமிழ் மக்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 22

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் இருந்து தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வெளியேறிவிட்டதாக தெரிய வருகிறது.

இங்குள்ள இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே அச்சம் காரணமாக மக்கள் வெளியேறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. (ஒ-5)

# மேஜர் டயஸ் நினைவாக வீதிக்குப் பெயர்

யாழ்ப்பாணம், ஆக. 22

திருநெல்வேலி வளாக வீதி நேற்றுமுதல் டயஸ் வீதியாக பெயர் மாற்றப்பட்டது.

அம்பாறை யாழ்ப்பாண மாவட்டங்களின் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் அரசியற் பொறுப்பாளர் மேஜர் டயஸ் கந்தசாமியின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று மாலை நடந்த ஒரு நிகழ்ச்சியில் புதிய வீதியின் பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிப் பிரமுகர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் [illegible] வைபவத்தில் கலந்து கொண்டனர். [ஒ-5]

# கண்ணியில் சிக்கி 5 படையினர் படுகாயம்

கொழும்பு, ஆக 22

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளம் ஒன்றின் மதகுகளைத் திறந்துவிடச் சென்ற இராணுவத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கண்ணிவெடித் தாக்குதலுக்கு ஆளாகி பலத்த காயமடைந்தனர். [ஒ-எ]

## படகு அகதி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ படகில் செல்லும் 4படகோட்டிகளில் இருவர் நீண்டகால அனுபவமும், கூடிய வலுவுள்ள இயந்திரத்தை இயக்கக்கூடிய அனுபவமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். படகும் போக்குவரத்துத் தகுதி உள்ளதாக இருக்க வேண்டும்.

★ அனுமதி பெற விரும்பும் படகோட்டியும், படகு உரிமையாளர்களும்கடல் அனுபவமுள்ள சிற்றூரவைத் தலைவரின் சிபார்சுடன் பிரதேசப் பொறுப்பாளரின் அனுமதியுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும். பரிசீலனையின் பின் அனுமதி வழங்கப்படும்.

★ பண்டத்தரிப்பு, அரியாலை, வடமராட்சி கிழக்கு, வல்வெட்டித்துறை, தீவுப் பகுதி ஆகிய இடங்களில்இயங்கும் அலுவலகங்களில் ஏதாவது ஒன்றில் விண்ணப்பங்கள் கையளிக்கப்பட வேண்டும்.

★ பயணம் செய்யும் பயணிகளும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும்.

★ அனுமதிப்பத்திரம் பெறாமல் இயங்கும் படகு உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். (இ-3)

## வடபகுதிக்கு - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தமை கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து, அந்த லொறிகள் மதவாச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (ஒ 3-5)

## அகதிகளுக்கான-:-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியது.

லொறியில் வந்த குருவானவர் உட்பட சகலரும் ஒரு கடைக்குள் தஞ்சம் அடைந்தனர்.

சுமார் 15 நிமிடம் வட்டமிட்டு ஹெலி தாக்கியதில் குருவானவர் தலையில் காயம் அடைந்தார். மற்றும் இருவரும் காயம் அடைந்தனர். (இ-5-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 5 ஊர்காவல் படையினர் ஏறாவூரில் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், ஆக. 22

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 5 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர்.

முதலாம் குறிச்சி என்னும் இடத்தில் நின்ற எட்டு ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் தாக்குதல் நடத்தியதாகவும்—

அதில் ஐந்துபேர் கொல்லப்பட, மூன்று பேர் தப்பி ஓடிவிட்டதாகவும்—

அவர்களிடமிருந்து றிப்பீற்றர் பிஸ்டல் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

## ஊழியர் அனுமதிப்பத்திரம் 25-ம் திகதி முதல் பெறலாம்

யாழ்ப்பாணம், ஆக. 22

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வெளியே கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் தமது கடமைக்குச் செல்ல நிரந்தர அனுமதி கோரும் பத்திரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி முத்திரைச் சந்தையில் உள்ள பயணிகள் போக்குவரத்துத் தொடர்பகத்தில் பெறலாம்.

அன்று காலை 9மணி முதல் மாலை 5 மணி வரை இந்தப் பத்திரங்களைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை, சமூக, தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளும் அன்று நிரந்தர அனுமதி கோரும் பத்திரங்களைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## நெடுந்தீவிலும் தாக்குதல்

நெடுந்தீவு, ஆக. 22

நெடுந்தீவில் வட்ட மிட்ட விமானம் ஒன்று திடீர் என வேட்டுக்களைத் தீர்த்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

நெடுந்தீவில் உள்ள குயிந்தா பகுதியில் சாட்டுத்தேன் எடுக்கச் சென்ற இவர்களை நோக்கியே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை. (இ-111)

## விடுதலைப் புலிகள் வழங்கும் விசேஷ அடையாளக் கார்ட்

யாழ்ப்பாணம், ஆக. 22

அடையாளக் கார்ட் இல்லாதவர்களுக்கு விசேஷ அடையாள கார்ட்டை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வழங்க இருக்கிறது.

அடையாள கார்ட் இல்லாதவர்கள் தமது பகுதி பிரதேசப் பொறுப்பாளரிடமோ அல்லது சிற்றூரவை தலைவரிடமோ இந்த அடையாள கார்ட்டைப் பெறலாம்.

அகதிமுகாம்களில் தங்கி உள்ளவர்களில், அடையாள கார்ட் இல்லாதவர்கள் அகதி முகாம் பொறுப்பாளரின் சிபார்சுடன் விடுதலைப் புலிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் கடிதத்துடன் இந்த அடையாளக் கார்ட்களைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வட-கிழக்கிற்கு அமெரிக்கா ரூ. 2 கோடி மருத்துவ உதவி

கொழும்பு, ஆக. 22

வடக்கு-கிழக்கு சண்டையில் பாதிககப்பட்ட பொது மக்களுக்குத் தேவையான மருந்து மற்றும் வைத்திய உதவிகளுக்கு என்று அமெரிக்கா, இரண்டு கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதியை அமெரிக்கா யுனிசெப் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இப் பணம் வைத்திய உதவிகளை வடக்கு-கிழக்குச் சண்டையில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்க பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கிலும் இம்மாகாணத்தின் எல்லையை ஒட்டியுமுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் மருந்துவகைகளையும் விநியோகிக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## அ. தி. மு. க. அணிகள் நேற்றும் வெளியேற்றப்பட்டன

சென்னை, ஆக. 22

தமிழ்நாடு சட்ட சபையில் இரண்டாவது நாளாக நேற்றும் அ.தி.மு.கவின் இரண்டு அணிகளைச் சேர்ந்த எம். எல். ஏக்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

சட்டசபையில் அ.தி.மு.கவின் இரு பிரிவினருக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டவிதம் குறித்து ஜெயலலிதா அணியைச் சேர்ந்த திரு.எஸ். ஆர் ராதாவும் போட்டிப் பிரிவுத் தலைவரான திரு. திருநாவுக்கரசும் நேற்றும் பிரச்சினையை எழுப்ப முயற்சித்தனர்.

அதற்கு சபாநாயகர் தமிழ்க் குடிமகன் இடமளிக்கவில்லை.

அதனைப் பொருட்படுத்தாது பேச முயன்ற திரு. ராதாவையும் அவரது சகாக்களையும் வெளியேற்றும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். பின்னர் திருநாவுக்கரசு குழுவினரையும் வெளியேற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஓ-எ)

### கிளிநொச்சியில் திருத்த வேலைகள் மேற்கொண்டால்.

## வடமராட்சி - தென்மராட்சிக்கு மின்சாரம் கிடைக்க வாய்ப்பு

கிளிநொச்சி, ஆக. 22

மின்சாரசபை ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குச் சென்று திருத்தவேலைகளை மேற்கொண்டால் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு மின் விநியோகம் கிடைக்க வாய்ப்பு உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் மின்கோபுரங்களும், அவற்றின் கேபிள்களும் கிளிநொச்சியில் ஏற்கனவே சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மின் நிலையத்தில் இருந்து பரந்தன் - முல்லைத்தீவு வீதி வரையிலான மூன்று மைல் தூரத்திலேயே இந்தச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சி மின் நிலையத்தில் போதிய ஊழியர்கள் இல்லாததாலேயே திருத்த வேலைகளுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து ஊழியர்கள் செல்லவேண்டியநிலைமை இருந்து வருகிறது. (இ - 76)

## போராளி வீர மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 22

கடந்த ஞாயிறு பலாலி இராணுவ முகாமிலிருந்து வயாவிளான் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி நவம் நேற்று முன்தினம் வீர மரணமடைந்தார். (உ-5)

## அரச அதிபரிடம் அனுமதிப்படிவம்

யாழ்ப்பாணம், ஆக. 22

தமிழ் பிரதேசங்களில் கடமை ஆற்றும் அரசாங்க ஊழியர்கள், வெளிமாவட்டங்களில் உள்ள தமது அலுவலகங்களுக்குச் செல்ல, நிரந்தர அனுமதிகோரும் படிவங்களை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் பெறலாம்.

பயணிகள் போக்குவரத்து தொடர்பகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (இ-3)

## 4 தமிழர்கள் உயிருடன் எரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 22

ஏறாவூரில் தளவாய் என்னுமிடத்தில் நான்கு தமிழ் மக்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கள் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினருமே இந்த கொலைகளைச் செய்தனர் என்றும் —

பொது மக்களுக்குச் சொந்தமான 10 வள்ளங்களையும் 5 வீடுகளையும் அவர்கள் எரித்து அழித்தனர் என்றும் கூறப்பட்டது.

## வெளியேறும் முடிவு கைவிடப்பட்டது

நேற்றுக் காலை மந்திகை வைத்தியசாலைப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலையடுத்து அங்கு கடமையாற்றிய பிரெஞ்சு டாக்டர்கள் குழுவினர் அங்கிருந்து வெளியேற முற்பட்டதாகவும்–

ஆனால் அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து அவர்கள் தமது முடிவை மாற்றிக்கொண்டதாகவும் அங்கிருந்துகிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ-3-5]

## ஒரு றாத்தல் பாண் 10 ரூபா!

கொக்குவில், ஆக. 22

நவாலிப் பகுதியில் பாண் ஒரு றாத்தல் 10 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. [ஓ-69]

## ஜி. சீ. ஈ. பரீட்சை: அதிபர்கள் எடுத்த முடிவு

யாழ்ப்பாணம், ஆக. 22

குடாநாட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பியபின்னர் – பாடசாலைகள் இயங்கத் தொடங்கி – ஒரு மாதத்துக்குப்பின்னரே ஜி. சீ. ஈ. (சா/தர) பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். அதுவரைவிண்ணப்பிக்கும் திகதியைப் பின்போடவேண்டும்.

– மேற்கண்டவாறுபரீட்சை ஆணையாளரைக் கோரும் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்-கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற கல்லூரி அதிபர்கள், கல்வி அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இம்முறை யாழ். மாவட்டத்திலிருந்து பாடசாலைகள் மட்டத்தில் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்புவதில்லை என்றும் –

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அவ்வாறே விண்ணப்பிக்கக்கூடாது எனக் கோருவதாகவும் –கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஓ-3-5)

## நேற்று வந்த கப்பலில் 1,700 தொன் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஆக. 22

நேற்றுக் காலை 9–30 மணியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த கப்பலில் இருந்து பொருள்கள், இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பமாகின.

அரிசி, சீனி, மண்ணெண்ணெய் மற்றும் கறிச்சரக்கு வகைகள், வேறு பாவனைப் பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 700 தொன்கள் கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளன. (ஓ-3-5)

## ஈழ அகதிகள் 83 ஆயிரம்!

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு நேற்று பிற்பகல் வரை வந்து சேர்ந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 83 ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மட்டும் பிற்பகல் வரை 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ஓ)

## இராணுவ பாதுகாப்புடன் பயணம்

கொழும்பு, ஆக. 22

மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கும் திருகோணமலைக்கும் பஸ்களில் பயணிகளை இராணுவப் பாதுகாப்புடன் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

270 பயணிகளுடன் மூன்று பஸ்கள் திருகோணமலைக்கும் 490 பயணிகளுடன் ஏழு பஸ்கள் கொழும்புக்கும் நேற்றுக்காலை மட்டக்களப்பில் இருந்து புறப்பட இருந்தன. (ஓ-எ)


## மரண அறிவித்தல்

### அ. சி. செல்லத்துரை

கோண்டாவில் நெட்டிலிப்பாய் அ. சி. செல்லத்துரை 21-08-1990 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரத்துவமடைந்த செல்வரத்தினம், செல்வராசா, கலாநிதி செல்வலிங்கம் (பல்கலைக் கழகம், சிங்கப்பூர்), செந்தில்நாதன் (கணக்காளர், லண்டன்), செல்வமகேஸ்வரன் (பொறியியலாளர், நியூசிலாந்து), செல்வகுமார் (பட்டயக் கணக்காளர், அவுஸ்திரேலியா), செல்வநேசன், சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், வித்தியாவதி, தவமணி, கிருஷ்ணா, சத்தியபாமா, தண்மதி, வசந்தி, கோமதி, சாந்தகுமார் ஆகியோரின் அருமை மாமனாரும், மோகனா, ரஞ்சன், ஆனந்தி, மாலா, செந்தி, ஆனந்தன், கலைச்செல்வி, தவச்செல்வி, ஜனார்த்தன், அமுதா, பவான், பிரதீபன், பார்த்தீபன், நவீன், லவன், குஷேன், வினோத், சஞ்சி, பார்த்தீபன், மயூரன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22-08-1990 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக நெட்டிலிப்பாய் இல்லத்திலிருந்து காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

செ. செல்வநேசன் [13911]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org